**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 01.08.2026**
**OS. No. 17/2022**
**வழக்கு சாட்சி DW.1– சித்தையன், த/பெ.பழனியப்ப கவுண்டர்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

15) நான் 1ம் வாதி பெருமாயிக்கு 16 சென்ட் மற்றும் 1 சென்ட் நிலம் ஆகியவை எழுதிக்கொடுத்தேன். ஆனால் நான் எழுதிக்கொடுத்த ஆவணத்தின் படி ச.எண்.307/16C ல் 18–1/2 சென்ட்ம், ச.எண்.307/16Bல் 1 சென்ட் நிலமும் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அடமானத்திற்காக எழுதிக்கொடுத்ததாக சொல்வது பொய் என்றும், அந்த ஆவணத்தில் கண்ட அளவுகள் பொய் என்றால் சரியல்ல. மேற்கண்ட ஆவணத்தில் கண்ட அளவுகள் படி தனக்கு தனிப்பட்டா வழங்க 1ம் வாதி பெருமாயி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்திருந்தார் என்றால் இல்லை.

16) 03.12.2021ம் தேதி சொத்துகளில் எந்த பிரச்சனையும் நடக்கவில்லையா என்றால் 1ம் வாதி பெருமாயி தரப்பில்தான் வந்து பிரச்சனை செய்தார்கள். சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் சொத்துக்களை அளக்க வந்தபோது என்னுடைய 1 சென்ட் நிலத்தை விட்டுவிட்டுதான் அளக்க வேண்டும் என்று நானும், 2ம் பிரதிவாதியும் பிரச்சனை செய்தோம் என்றால் அவ்வாறு இல்லை. நானும், 2ம் பிரதிவாதியும் பிரச்சனை செய்ததை வீடியோ பதிவாக எடுத்து, அதை நீதிமன்றத்தில் தாக்க செய்யப்பட்டுள்ளது என்றும் ஆனால் நான் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

17) ஆவணப்படி நான் 19–1/2 சென்ட் எழுதிவைத்துவிட்டு 16 சென்ட் தான் எழுதி வைத்ததாக சொல்லி அதிலும் 1 சென்ட் நிலம் எனக்கு தரவேண்டும் என்று வாதியின் அமைதியான அனுபவத்திற்கு நானும், 1ம் பிரதிவாதியும் பிரச்சனை செய்து வருகிறோம்

என்றால் சரியல்ல, நான் அடமானத்திற்காகதான் எழுதிகொடுத்தோம். பி.வா.சா.ஆ.2 பட்டா எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் கூட்டுப்பட்டாவில் 2ம் பிரதிவாதி மாதேசுக்கு நிலம் உள்ளது என்று காண்பிப்பதற்காக தாக்கல் செய்தேன்.

18) ச.எண்.307/16Cல் எனக்கு நிலமே இல்லாத போது அதை பொறுத்து பத்திரம் எழுதி வைத்துவிட்டு தற்போது அது கடனுக்காக எழுதி வைத்தேன் என்று பொய்யாக வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. எங்கள் சொத்துகளில் கிணறு மட்டும் தான் பொது சொத்தாகும், மற்றவை அனைத்தும் பாகம் பிரித்து கொண்டோம்.

19) நாங்கள் எழுதிக்கொடுத்த பத்திரத்தில் ச.எண்.307/16Bல் உள்ள கிணறு பங்கை பொறுத்துதான் 2ம் பிரதிவாதி அதில் கையொப்பம் செய்தாரா என்றால் ஆமாம். பெயரளவில் கிரயம் என்பதால்தான் 2ம் பிரதிவாதியிடம் மட்டும கையொப்பம் பெற்றதாகவும், அவருடைய தம்பியிடம் கையொப்பம் வாங்கவில்லை என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் வாதியிடம் சரியான பிரதிபயன் பெற்றுக்கொண்டு சொத்தை விற்றுவிட்டு 1ம் வாதி தாவா சொத்திற்கு தனிப்பட்டா கோரி விண்ணப்பம் செய்தபோது பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அளவை விட குறைவான சொத்தைதான் விற்றிருக்கிறேன் என்றும், அதிலும் 1 சென்ட் நிலத்தை படிப்பறிவு இல்லாத 1ம் வாதியை ஏமாற்றவேண்டும் என்பதற்காக தகராறு செய்து வருகிறேன் என்றும், அனைத்து உண்மையான ஆவணங்களையும் வாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தபிறகும், நிமிர்த்த கிரயத்திதற்காக அந்த கிரயம் 1ம் வாதியின் பெயரில் செய்யப்பட்டது என்றும், 16 வருடம் கழித்து கடனுக்காக எழுதிக்கொடுத்திருக்கும் பட்சத்தில் அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்காமல் வாதி வழக்கு தாக்கல் செய்து நாங்கள் இடையூறு செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்டபிறகு பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

20) நிரூபண வாக்குமூலத்தில் 2001ல் தாவா சொத்தில் நான்தான் கூரைவீடு அமைத்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதிகளுக்கு விற்றுவிட்டு மோசடியாக அவர்களிடமிருந்து அதை அபகரிக்கவேண்டும்

என்று தொடர்ந்து தொல்லைகள் கொடுத்து வருகிறோம் என்றும், 2ம் பிரதிவாதியின் சகோதரரான வேலு என்பவர் மூலம் அ.வ.எண்.49/2022 என்ற வழக்கை தாக்கல் செய்து பாகம் பிரியாத கூட்டுக்குடும்ப சொத்து என குறிப்பிட்டு 1ம்வாதிக்கு கிரயம் செய்து கொடுத்தது செல்லதக்கதல்ல என்று பரிகாரம் கேட்டு தொல்லைகள் கொடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.